DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II, RAMANATHAPURAM

**C.C.No.279/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW4 | Caste | : | |
| Name | : | இருதயராஜ் | Age | : | 56 |
| F/N | : | இருதயநேசன் | Occupation | : | ராணுவத்தில் பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றேன். |
| Village | : | மூலக்கொத்தளம் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 15-th day of June 2023.

<u>முதல் விசாரணை</u>

1. நான் இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது இராமநாதபுரம் மாவட்டம் மூலக்கொத்தளத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். (**சாட்சி ஆஜர் எதிரியை சரியாக அடையாளம் காட்டுகிறார்**). கடந்த 2011ம் ஆண்டு முதல் 2022ம் ஆண்டு வரை இராமநாதபுரம் ராஜா மேல்நிலைப்பள்ளி மைதானம் அருகே உள்ள இராமநாதபுரம் ராஜாவிற்கு சொந்தமான இடத்தில் நான் பாலாஜி பெட்ரோல் பங்க் வாடகைக்கு நடத்தி வந்தேன். அந்த இடத்திற்கு மாதம் ரூ.11,000 வாடகை கொடுத்து வந்தேன். ஆஜர் எதிரிகள் அந்த பணத்தை என்னிடம் இருந்து வசூல் செய்வார்கள். நான் மேற்படி வாடகை பணத்தை பணமாகவோ அல்லது காசோலைகளாகவோ கொடுப்பேன்.

2. காசோலைகளாக கொடுக்கும்போது பணத்தை மட்டும் நிரப்பி கொடுப்பேன். நான் இராமநாதபுரம் கரூர் வைசியா வங்கி கணக்கு எண்.1185135000002133 என்ற கணக்கிற்கு உண்டான காசோலைகளை ஆஜர் எதிரிகளிடம் கொடுத்திருந்தேன். மேற்படி காசோலைகளை ஆஜர் எதிரிகள் ராஜாவின் கணக்கில் செலுத்தாமல் தங்களுடைய கணக்கிற்கு செலுத்தி கொண்டு பணத்தை எடுத்து கொண்டார்கள் என்று எனக்கு கடந்த 27.06.2020ம் தேதி தெரிய வந்தது. ஆஜர் எதிரிகள் சுமார் ரூ.8,00,000த்தை அவர்களுடைய வங்கி கணக்கில் செலுத்தி கொண்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. ஆரம்ப கட்டத்தில் மாத வாடகையாக ரூ.8,500/-ஐ நான் ராஜா மேல்நிலைப்பள்ளிக்கு செலுத்தி வந்தேன். எந்தெந்த மாதங்களில் நான் வாடகை பணத்தை பணமாகவோ அல்லது காசோலைகளாகவோ கொடுத்தேன் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பொதுவாக காசோலைகளை

கொடுத்தால் யாருக்கு கொடுக்கிறோம் என்று குறிப்பிட்டு தான் கொடுப்பார்கள் என்றால் சரிதான். வாடகை பணத்தை எவ்வளவு ரூபாய் பணமாகவும், காசோலையாகவும் கொடுத்தேன் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. வாடகை பணத்தை வசூல் செய்ய ஆஜர் எதிரிகள் ஒரு சில முறை சேர்ந்து வருவார்கள், ஒரு சில முறை தனியாக வருவார்கள். எந்தெந்த மாதங்களில் சேர்ந்து வந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. நானும், இராமநாதபுரம் ராஜாவும் நேரில் சந்தித்து பேசிக் கொள்வோம் என்றால் சரிதான். ஆஜர் 1வது எதிரி என்னிடம் வாடகை பெறுவதற்கு ராஜாவிடம் இருந்து ஏதேனும் அனுமதி கடிதம் எடுத்து வருவாரா என்றால் எடுத்து வரமாட்டார். ராஜா என்னிடம் போனில் தகவல் சொல்லுவார். ஆஜர் எதிரிகள் தவிர மற்ற நபர்களிடம் நான் பணத்தை கொடுத்ததில்லை. பள்ளி நிர்வாகம் சார்பாக நான் வாடகை பணம் கட்டவில்லை என்ற காரணத்திற்காக என்னை மேற்படி அவர்களின் இடத்தில் இருந்து காலி செய்ய சொன்னார்களா என்றால் இல்லை. நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை.

3. ஆஜர் எதிரிகள் மீது நான் தனிப்பட்ட முறையில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. போலீசார் என்னை ஒரே ஒரு முறை விசாரித்தார்கள். நான் சொன்னதுபோல் எதிரிகள் எந்த கையாடலும் செய்யவில்லை என்றாலும், அ.சா.1 கேட்டு கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் இருந்து வசூல் செய்த பணத்தை ஆஜர் எதிரிகள் முறையாக பள்ளியின் வங்கி கணக்கில் செலுத்திவிட்டதால் என் மீது பள்ளி நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை

**மறு விசாரணை : இல்லை**

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2**
**இராமநாதபுரம்**

DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II, RAMANATHAPURAM

**C.C.No.279/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW5 | Caste | : | |
| Name | : | பாக்கியம் | Age | : | 64 |
| W/o | : | சாத்தன் | Occupation | : | துப்புரவு பணியாளர் (ஓய்வு) |
| Village | : | திடீர் நகர் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 15-th day of June 2023.

**முதல் விசாரணை**

நான் ராஜா பள்ளியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது இராமநாதபுரம் மாவட்டம் திடீர் நகரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். (**சாட்சி ஆஜர் எதிரியை சரியாக அடையாளம் காட்டுகிறார்).** நான் பணியில் இருந்தபோது எனக்கு மாத சம்பளம் என்னுடைய இராமநாதபுரம் சென்ட்ரல் வங்கியில் உள்ள கணக்கில் போடுவார்கள். அந்த பணத்தை நான் என்னுடைய ATM Card பயன்படுத்தி எடுப்பேன். ஆஜர் 1வது எதிரி என்னுடைய வங்கி கணக்கில் ரூ.11,000/-த்திற்கு உண்டான காசோலையை போட்டார். அந்த தொகை என்னுடைய வங்கி கணக்கில் வரவு பெற்றதால் மேற்படி தொகையை எடுத்து கொள்வதற்காக ஆஜர் 1வது எதிரி என்னிடம் என்னுடைய ATM Card ஐ கேட்டார். நான் என்னுடைய ATM Card ஐ அவரிடம் கொடுத்தேன். அவர் அதை பயன்படுத்தி ரூ.11,000/-த்தை எடுத்து கொண்டார். மேற்படி பணம் ராஜா பள்ளிகூடத்தின் பணம் என்ற விபரத்தை நான் தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் இராஜா மேல்நிலைப்பள்ளியில் இருந்து கடந்த 2019ம் ஆண்டு ஓய்வு பெற்றேன். ஆஜர் 1வது எதிரி எந்த தேதியில் என்னுடைய வங்கி கணக்கிற்கு பணத்தை மாற்றினார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த தேதியில் ஆஜர் 1வது எதிரி என்னிடம் ATM Card கேட்டார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எந்த தேதியில் ஆஜர் 1வது எதிரி என்னுடைய ATM Card ஐ பயன்படுத்தி பணத்தை எடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னுடைய வங்கி கணக்கில் இருந்து பணம் எடுத்தால் என்னுடைய போனுக்கு வங்கி மூலம் குறுஞ்செய்தி வரும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

2. என்னுடைய வங்கி கணக்கு எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் சொல்லி தான் மேற்படி பணம் ராஜா பள்ளிகூடத்தின் பணம் என்று நான் தெரிந்து கொண்டேன். அ.சா.1 கேட்டு கொண்டதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் இருந்து என்னையும், தமிழ்செல்வியையும் காப்பாற்றுவதாக அ.சா.1 சொன்னதால் தற்போது அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை

**மறு விசாரணை :** இல்லை

**(ஒப்பம்/–க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2**
**இராமநாதபுரம்**

DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**C.C.No.279/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW6 | Caste | : | |
| Name | : | தமிழ்செல்வி | Age | : | 40 |
| W/o | : | மனோகரன் | Occupation | : | துப்புரவு பணியாளர் (அரசு மருத்துவமனை, இராமநாதபுரம்) |
| Village | : | மீனாட்சிபுரம் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 15-th day of June 2023.

**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். (**சாட்சி ஆஜர் எதிரியை சரியாக அடையாளம் காட்டுகிறார்**). இதற்கு முன்பு நான் இராமநாதபுரம் ராஜா மேல்நிலைப்பள்ளியில் 2004ம் ஆண்டு முதல் 2006ம் ஆண்டு வரை துப்புரவு பணியாளராக பணி செய்து வந்தேன். அப்போது ஆஜர் 1வது எதிரி என்னிடம் ரூ.11,000/-த்திற்குண்டான இரண்டு காசோலைகளை கொடுத்து எனது வங்கி கணக்கில் செலுத்தி பணத்தை எடுத்து தர சொன்னார். நானும் அவர் சொன்னதுபோல் எனது வங்கி கணக்கில் காசோலைகளை செலுத்தி பணத்தை எடுத்து அவரிடம் கொடுத்தேன். அதன் பின்பு இராமநாதபுரம் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் என்னை அழைத்து விசாரித்தார்கள். அந்த விசாரணையில் மேற்படி பணம் ராஜா பள்ளிக்கு சொந்தமான பணம் என்பதை தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

2006ம் ஆண்டு எந்த தேதியில் ஆஜர் 1வது எதிரி என்னிடம் காசோலைகளை கொடுத்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் சொல்லி தான் மேற்படி பணமானது ராஜா மேல்நிலைப்பள்ளிக்கு சொந்தமானது என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் ஆரம்ப கட்டத்தில் என்னையும், அ.சா.5யும் எதிரிகளாக போலீசார் சேர்த்திருந்தார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் இருந்து என்னையும், அ.சா.5யும் காப்பாற்றுவதாக அ.சா.1 சொன்னதால் தற்போது அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை

**<u>மறு விசாரணை :</u>** இல்லை

**(ஒப்பம்/–க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2**
**இராமநாதபுரம்**